உமியைக் கொடுத்து விட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதி சாப்பிடப் போகிறது!

இந்தியாவிடம் பொருளாதாரச் சூறையாடலை நடத்த - அமெரிக்காவுக்கு நம் நாட்டின் வாசலைத் திறந்து விட்டிருக்கிறார் பிரதமர் மோடி!

பொருளாதார ஒப்பந்தம் குறித்து – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, பிப்.5–

''நீ அரிசி கொண்டுவா! நான் உமி கொண்டு வருகிறேன், இரண்டையும் கலந்து ஊதி ஊதிச் சாப்பிடுவோம்'' என்பதைப் போல, அமெரிக்கா உமியைக் கொடுத்துவிட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதிச் சாப்பிடப் போகிறது எனவும் நாட்டின் காவலாளி (சௌகிதார்) எனச் சொல்லிக் கொள்ளும் மோடி, பொருளாதார சூறையாடலை அமெரிக்கா நடத்த இந்தியாவின் வாசலைத் திறந்துவிட்டிருக்கிறார் என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

ஒரு பட்டாம்பூச்சியின் சிறகடிப்புக்கும் வரப் போகும் பூகம்பத்திற்கும் தொடர்பு உண்டு. உலகில் இரண்டு வெவ்வேறு நாடுகளில் நடக்கும் விவகாரமும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை என்பதுதான் கேயாஸ் தியரியின் தத்துவம்! இந்த கேயாஸ் தியரி, பிரதமர் மோடியின் முகத்தி ரையைக் கிழித்திருக்கிறது. அமெரிக்கப் பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டீன் கோப்புகளில் உள்ள தகவல் கடந்த 30-ஆம் தேதி வெளியான பிறகு, அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் பிரதமர் மோடியும் அடுத்த டுத்து எடுக்கும் முடிவுகள் இந்தியாவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்காவில் 25 சதவிகிதப் பரஸ்பர வரியும், ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்காக 25 சதவிகித அபராத வரியும் என்று மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தது. இதனால் இந்தியப் பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. 6 நாளிலேயே இந்தியாவுக்கு விதிக்கப்பட்டிருந்த 50 சதவிகித வரியை 18 சதவீதமாக அமெரிக்க அதிபர் டிரம்ப் குறைத்தார். இடைப்பட்ட 6 நாட்களில் என்ன நடந்தது? என்பதை கேயாஸ் தியரி சொல்லும்!

ட்ரம்ப்பின் அறிவிப்பு அதிர்ச்சியளிக்கிறது!

''அமெரிக்கா வரியைக் குறைத்தது போல, இந்தியாவும் அமெரிக்கப் பொருட்கள் மீதான வரியைப் பூஜ்யமாக்க நடவடிக்கையை முன்னெடுப்பார்கள். பிரதமர் மோடி, அமெரிக்கப் பொருட்களை மிக அதிகமாக 500 பில்லியன் டாலருக்கு (இந்திய மதிப்பில் 45.5 லட்சம் கோடி ரூபாய்) எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண் பொருட்கள், நிலக்கரி மற்றும் பல பொருட்களைக் கூடுதலாக வாங்கவும் சம்மதித்துள்ளார்'' எனச் சொல்லியிருக்கிறார் ட்ரம்ப்.

இந்த அறிவிப்பு நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அமெரிக்காவிடம் இருந்து விவசாயப் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்யும் என்று டிரம்ப் அறிவித்ததை அடிபணிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார் பிரதமர் மோடி. அமெரிக்கப் பொருள்களுக்கு இறக்குமதி வரியைப் பூஜ்யமாக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் மோடி.

அமெரிக்க - இந்திய வர்த்தக ஒப்பந்தம் மூலம் ஒன்றிய பாஜக அரசு எடுத்துள்ள முடிவு, இந்திய விவசாயிகளுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும். அமெரிக்காவின் வரியை 18 சதவிகிதமாகக் குறைக்க வைத்துவிட்டோம் எனத் தம்பட்டம் அடித்தாலும், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தால் இந்திய விவசாயிகளுக்கும், சிறு குறு தொழில்துறையினருக்கும் ஏற்படப்போகும் பேராபத்தை 18 சதவிகித வரி குறைப்பைக் காட்டி மறைக்க முயல்கிறது மோடி அரசு.

இந்தியாவின் காவலாளி எனக்கூறும் மோடி அமெரிக்காவிடம் சிக்குவதா?

அமெரிக்காவிடம் இருந்து இந்திய மதிப்பில் 45.5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்குப் பொருட்களை வாங்கப் பிரதமர் மோடியைச் சம்மதிக்க வைத்துவிட்டோம் என அமெரிக்க அதிபர் டிரம்ப் வெற்றிக் களிப்போடு சொல்கிறார். அதாவது, இந்தியாவின் மொத்த பட்ஜெட் மதிப்பில் இது 85 சதவிகிதம். 45.5 லட்சம் கோடி ரூபாய் என்கிறயானை, இந்தியாவின் உள்ளூர் வர்த்தகம் என்கிற கரும்புக் காட்டிற்குள் நுழைந்து துவம்சம் செய்யப் போகிறது. நாட்டின் காவலாளி (சௌகிதார்) எனச் சொல்லிக் கொள்ளும் மோடி, பொருளாதார சூறையாடலை அமெரிக்க நடத்த இந்தியாவின் வாசலை திறந்துவிட்டிருக்கிறார்.

18 சதவிகித வரியை அமெரிக்க ஒன்றும் சும்மா கொடுத்துவிடவில்லை. சலுகை விலையில் கச்சா எண்ணெய்யை ரஷியாவிடம் இருந்து வாங்குவதை நிறுத்த சொல்லி, இந்தியாவுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவில் 18 சதவீத வரியை விதித்துவிட்டு, இந்தியாவில் விற்கப்படும் அமெரிக்கப் பொருட்களுக்குப் பூஜ்ய வரி என்று சொல்கிறது.

நீ அரிசி கொண்டுவா! நான் உமி கொண்டு வருகிறேன், இரண்டையும் கலந்து ஊதி ஊதிச் சாப்பிடுவோம் என்பதைப் போல, அமெரிக்கா உமியைக் கொடுத்துவிட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதிச் சாப்பிடப் போகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் அடிபணிந்து கிடக்கிறார் பிரதமர் மோடி. நம்மை கட்டுப்படுத்த அமெரிக்கா மாகாணங்களில் இந்தியாவும் ஒன்றா? இந்தியாவை, அமெரிக்காவிடம் மோடி அடகு வைத்துவிட்டாரா? போரே நடக்காமல், ஏவுகணைகள் ஏவாமல் இந்தியா மீது ஒரு பொருளாதாரப் போரை நடத்தியிருக்கிறது அமெரிக்கா. அதற்குத் துணை போயிருக்கிறார் பிரதமர் மோடி.

இந்தியாவின் எதிர்காலம் வர்த்தக ஒப்பந்தத்தால் பாதிக்கும்!

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் எதிர்காலத்திற்குச் சிறந்தது என எப்படிக் கொண்டாட முடியும்? 45 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான அமெரிக்கப் பொருட்களை இந்தியாவிற்குள் அனுமதிக்கும் அளவிற்கு இந்தியச் சந்தையைக் கட்டுப்பாடின்றித் திறந்து வைத்தால், இந்திய விவசாயிகள், வியாபாரிகள், சிறுகுறு தொழில்துறையினரின் வாழ்வாதாரம் சீரழிந்து சின்னாபின்னமாகிவிடும்.

இந்தியாவின் மிகப்பெரிய சந்தையும், மக்கள் தொகையும் தங்கள் நாட்டின் வேளாண் பொருட்களை அதிக அளவிற்கு விற்பதற்கு உதவும். இதனால் கிராமப்புற அமெரிக்காவின் பொருளாதாரம் செழிக்கும் என்று அமெரிக்காவின் வேளாண் துறை அமைச்சர் ப்ரூக் ரோலின்ஸ் கூறியிருக்கிறார். நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் வேளாண்துறையை அமெரிக்காவிற்கு அடகு வைக்கும் முயற்சியா இந்த வர்த்தக ஒப்பந்தம் என்கிற சந்தேகம் எழுகிறது.

அமெரிக்காவில் இருந்து குறைந்த விலையில் சோயாபீன், சோளம், பருத்தி மற்றும் கோதுமை போன்றவை இறக்குமதியானால், இந்திய விவசாயிகளின் விளைபொருட்களுக்கான விலை உள்நாட்டுச் சந்தையில் பெருமளவில் குறையக்கூடும். பாதாம், ஆப்பிள் போன்ற பொருட்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படுவதால் வியாபாரப் போட்டி அதிகரித்து, உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.

அமெரிக்க விவசாயிகளிடம் இந்திய விவசாயிகள் போட்டி போட முடியுமா?

அமெரிக்காவில் விவசாயம் என்பது பெரும்பாலும் சிறிய அளவில் நடைபெறுவதில்லை. அமெரிக்க அரசு அதிக அளவில் மானியம் தருவதாலும் வேளாண் பணிக்காகப் பெரிய இயந்திரங்கள் கிடைப்பதாலும் ஹெக்டேர் கணக்கில் பெரும் பண்ணைகளாகவே அங்கு விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் 86 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகள் இருப்பதால் அவர்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்போது, அமெரிக்காவின் பெரும் பண்ணை விவசாயிகளுடன் போட்டி போட முடியாது. அமெரிக்க விவசாயிகளுக்கு அதிக மானியம் கிடைப்பதால் உற்பத்திப் பொருட்களை மலிவான விலைக்குத் தரும் சூழல் ஏற்படும்போது இந்திய விவசாயிகள் பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

அமெரிக்காவின் பால் பொருட்கள் மீதான வரி குறைப்பு கோரிக்கையை ஒன்றிய பாஜக அரசு ஏற்கும் சூழலில் இந்தியாவின் லட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் விவசாயப் பொருள் மூலம் அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட விதைகள் இந்தியச் சந்தைக்குள் ஊடுருவினால் அது இந்தியாவின் விவசாயத் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், இந்தியர்களின் உடல்நலனிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

அமெரிக்காவின் மரபணு விதையால் இந்தியாவின் விவசாயத்திற்கு கடும் பாதிப்பு!

இந்திய விவசாயிகளையும் வர்த்தகர்களையும் பாதிக்கும் அமெரிக்க உடனான வர்த்தக ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் பற்றி ஒன்றிய பாஜக அரசு நாட்டுமக்களுக்கு விளக்கம் தரக் கோரினால், இந்தியாவிற்கு ஏற்படப்போகும் பிரகாசமான எதிர்காலத்தைக் கண்டு திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பொறாமைப்படுவதாக ஒன்றிய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஸ் கோயல் வடிகட்டிய பொய்யைச் சொல்லியிருக்கிறார். அந்த "பிரகாசமான எதிர்காலம்" என்னென்ன என்பதைப் பட்டியலிடலாமே மிஸ்டர் பியூஸ் கோயல்? தமிழ்நாட்டிற்கு வந்து அதிமுக கூட்டணிக்காகக் களமாடி அதற்கான காரண காரியங்களை எல்லாம் விளக்கும் பியூஸ் கோயல் அமெரிக்க உடனான வர்த்தக ஒப்பந்தத்தை பற்றி மட்டும் ஏன் விரிவாகப் பேச மறுக்கிறார்?

இந்தியப் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவிகிதமாக குறைத்ததை மோடி அரசின் வரலாற்றுச் சாதனையாகப் பாஜகவினர் கொண்டாடுகின்றனர். இந்தியப் பொருட்களுக்கான அமெரிக்காவின் வரி 3 சதவீதமாகவே இருந்த நிலையில் அதனை மோடி அரசுதானே தனது தவறான வெளியுறவுக் கொள்கையால் 50 சதவீதம் வரை உயர்த்தியது. அப்போது ஓடி ஒளிந்து பதுங்கியவர்கள் எல்லாம், 18 சதவிகிதமாக குறைத்ததற்கு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். திருப்பூரில் தொடங்கி நாடுமுழுவதும் ஜவுளித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டபோதும் பிரதமர் மோடி எங்கே பதுங்கியிருந்தார்?

மோடியின் சுயநலத்தால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு பாதிப்பு!

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெய்யை வாங்கி அதனைப் பெட்ரோலியப் பொருட்களாக மாற்றி வெளிநாடுகளுக்கு விற்று அம்பானி போன்ற பெரும் கார்ப்பரேட்டுக்கள் கொள்ளை லாபம் அடைவதற்கு உதவுவதிலேயே குறியாக இருந்த மோடி அரசு, அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் இந்தியாவில் தொழில்துறை நலிவடைந்து, வேலைவாய்ப்புகள் பறிபோனதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பிரதமர் மோடி தனது சுயநலத்தாலும், தவறான வெளியுறவுக் கொள்கையாலும், இந்திய விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் முடிவை எடுத்தபோதும் தன்னை விவசாயி எனத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் பழனிசாமி இதுவரை வாய்திறக்காமல் மவுனமாக இருக்கிறார். கார்ப்பரேட் முதலாளிகளுக்காக விவசாயிகளுக்குப் பாதகமான வேளாண் சட்டங்களை ஒன்றிய பாஜக அரசு கொண்டுவந்தபோது முட்டுக்கொடுத்த வாதாடிய எடப்பாடி பழனிசாமி இப்போது என்ன சொல்லப் போகிறார்?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலத்தில் மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில், தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி.முன்னிலையில் நடைபெற்ற "மீண்டும் வா தலைவனே, வென்று வா ஸ்டாலினே" பொதுகூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர், கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர். சபாபதி மோகன் எழுச்சி உரை ஆற்றினார். உடன் கூட்டத்தில் டி.எம். அரியப்பன், கூடப்பட்டி சுப்பிரமணி, முருகன், எம்வீடி.கோபால்,முனியப்பன், பி.கே.அன்பழகன், முத்துக்குமார், சக்திவேல், மாது, ஆனந்தன், கண்ணபெருமாள், சரவணன், டி. சந்திரசேகர், பி.கே.முரளி, ஆர்.சிவகுரு, சந்தர், வெங்கடேசன், ஜி.எல். வெங்கடாசலம், குட்டி மோகன், இல. கிருஷ்ணன், சந்தர், மகேஷ்குமார், ஹரிபிரசாத், ஏ.வி.குமார், பரணி சக்தி மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் தொழிற் வளர்ச்சித்துறை – புத்தாக்க நிறுவனங்களில்–

பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கான வழிமுறைகளை வகுத்துள்ளதா?

மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.5–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 03.2.2026 அன்று மக்களவையில் புத்தாக்க நிறுவனங்களில், பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான விகிதாச்சர முறை பின்பற்றப்படுகிறதா? என்றும் அவர்களை ஊக்குவிக்க தேவையான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா? என்றும் நிதியுதவி அளிப்பதில் இந்தப் பிரிவினருக்கான சலுகைகள் ஏதும் அளிக்கும் திட்டம், ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜித்தின் பிராசாதாவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த 31 டிச்மபர் 2025 நிலவரப்படி 30 மாநிலங்கள், மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 2,07,135 நிறுவனங்கள் புத்தாக்க நிறுவனங்கள் என கண்டறியப்பட்டுள்ளது என்றும் இவற்றில் 99687 நிறுவனங்கள் பெண் இயக்குநர்கள் மற்றும் பங்குதாரர்களை கொண்டிருப்பதால் 48 சதவீதம் அளவிற்கு பெண்களின் பங்களிப்பு உள்ளது என்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்தை மேம்படு;த்தும் வகையில் கடன்உறுதியளிப்பு திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சி, மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தும் திட்டம், வங்கி கடன்களில் பல்வேறு சலுகைத் திட்டங்களை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை,

ஒன்றிய அரசின் வழியாக அளித்து வருகிறது என்றும் பிரதம மந்திரி விராசத் கா சம்வர்தன் என்ற திட்டம் மூலம், மதச் சிறுபான்மையினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, சிறுபான்மை நலத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், திறன் மேம்பாட்டுஅமைச்சகத்தின் மூலம் கணினி இணையதளம் வழியாக சந்தைப்படுத்துதல், கடன் வசதி திட்டம், திறன் மேம்பாடு ஆகியவற்றில் பயிற்ச அளிக்கப்படுகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

இந்திய தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் கீழ் செயல்பட்டு வரும் புத்தாக்க நிதியத்தின் உதவியுடன் அனைத்து புத்தாக்க நிறுவனங் களுக்கும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு, கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 20836 கோடிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தமிழ் நாட்டிற்கென ரூபாய் 1071 கோடிகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் துவக்க நிலையுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து மாநிலங்களுக்குமாக ரூபாய் 591 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்றும் தமிழ் நாட்டிற்கென ரூபாய் 57 கோடிகள் மட்டும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும் கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் இந்திய மாநிலங்களுக்கென ரூபாய் 809 கோடிகள் வழங்கியுள்ள நிலையில் தமிழ் நாட்டிற்கென புத்தாக்க நிறுவனங்களுக்கென ரூபாய் 84 கோடிகள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

சேலம் மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய தொகுதிகளில்

'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை!

கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி சிறப்புரை!

சேலம், பிப். 6 -

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, இன்று (06.2.2026) கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சேலம்ம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சேலம் மேற்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றார்.

அதன் விபரம் வருமாறு:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்ற;பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரையை இன்று (06.2.2026) கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சேலம் மேற்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டம், கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல், தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தல் மற்றும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்க விருக்கின்றார். இதற்கான ஏற்பாட்டை சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும், சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சருமான இரா.ராஜேந்திரன் செய்து வருகின்றார்.

06.02.2026, வெள்ளிக்கிழமை

- சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி

சேலம் மாநகரம் - தலைவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல்

முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு - மாநகராட்சி தொங்கும் பூங்கா மண்டபம்

"தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைக் கூட்டம் - பொன்னம்மாப்பேட்டை

ஈரோடு –நாமக்கல் புதிய ரயில் பாதைக் கோரிக்கையை நிராகரித்த ரயில்வே அமைச்சகம்!

ஈரோட்டு மக்களுக்கு ஒன்றிய அரசு மாபெரும் துரோகம்!

கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.6 –

தமிழ் மக்களின் உழைப்பையும் வரியையும் உறிஞ்சிக்கொண்டு, வளர்ச்சித் திட்டங்களில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நயவஞ்சகப் போக்கு மீண்டும் ஒருமுறை நாடாளுமன்றத்தில் அம்பலமாகியுள்ளது எனவும்

ஈரோடு மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஈரோடு – நாமக்கல்லை எளிதாக இணைக்கும் புதிய ரயில் பாதைக் கோரிக்கையை, நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலில் ஒன்றிய அரசு முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

1. ஈரோடு மக்களின் 50 ஆண்டுகால கோரிக்கை நிராகரிப்பு:

ஈரோடு – நாமக்கல் இடையே நேரடி ரயில் பாதை என்பது இப்பகுதி மக்களின் 50 ஆண்டுகால தார்மீகக் கோரிக்கை. ஆனால், சேலம் மற்றும் கரூர் வழியாக ஏற்கனவே இணைப்பு உள்ளதாகக் கூறி இக்கோரிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது.

தற்போதைய பாதைகள் சுமார் 100 கிலோ மீட்டருக்கும் மேல் சுற்றிச் செல்லும் நிலையில், வெறும் 30 – 40 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நேரடிப் பாதையை 'அவசியமற்றது' எனக் கூறுவது ஈரோடு தொகுதி மக்களை முட்டாளாக்கும் செயலாகும்.

2. குமாரபாளையம் தொழில் மண்டலத்தின் மீது தாக்குதல்:

ஆசியாவிலேயே மிகப்பெரிய விசைத்தறி மற்றும் ஜவுளி மையமான குமாரபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை ரயில்வே வரைபடத்தில் இணைக்க ஒன்றிய அரசுக்கு விருப்பமில்லை என்பது, பதிலில் இருந்து தெளிவாக தெரியவந்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக, இந்தப் பகுதிகள் ரயில்வே இணைப்பின்றி பொருளாதார ரீதியாகப் பின்தங்கி யுள்ளன. ஆனால், நடைமுறையை புரிந்து கொள்ளாமல், "குமாரபாளையம் ஈரோட்டில் இருந்து வெறும் 15 கி.மீ தொலைவு தான் என்று காரணம் சொல்லி தட்டிக்கழிக்கிறது ஒன்றிய அரசு.

3. சென்னை செல்லும் பயணிகளுக்கும் விடிவு இல்லை:

ஈரோடு மற்றும் நாமக்கல் வழியாக சென்னைக்கு புதிய ரயில் சேவை கோரியதற்கு, "தற்போதுள்ள 4 வழித்தடங்களில் இயக்கப்படும் ரயில்களே பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானது என ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

இதுவும் நடைமுறையை உணராத ஆணவமான செயலே! அந்த 4 வழித்தடங்களில் வரும் ரயில்கள் ஏற்கனவே கேரளா மற்றும் தென் மாவட்ட பயணிகளால் நிரம்பி வழிந்து, ஈரோடு மற்றும் நாமக்கல் மக்களுக்கு ஒரு இருக்கை கூட கிடைப்பதில்லை.

எனினும், மக்களின் தவிப்பை சிறிதும் உணராமல் "உள்ள வழித்தடங்களே போதும் என்று அலட்சியாகப் பேசுகிறது ஒன்றிய அரசு.

4. நிலம் கையகப்படுத்துதல் ஒன்றிய அரசின் 'பச்சைப் பொய்':

தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்கள் தாமதமாவதற்கு நிலம் கையகப்படுத்துதலைக் காரணமாகக் காட்டி, நாடாளுமன்றத்தில் பொய்யுரைத்துள்ளது ஒன்றிய அரசு உண்மையில், தமிழ்நாடு அரசு நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்குத் தேவையான அனைத்து நிர்வாக ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது. ஆனால், திட்டங்களுக்கு 1000 கோடி வேண்டுமென்றால், அதில் 10%–யை கூட ஒழுங்காக ஒதுக்காமல், மாநில அரசு மீது பழியைத் திருப்பி தப்பிக்கப் பார்க்கிறது ஒன்றிய அரசு.

5. வரிப்பணம் தமிழ்நாட்டுடையது; திட்டங்கள் வடமாநிலங்களுக்கா?

தமிழ்நாட்டிற்கு அதிக நிதி வழங்குவதாகவும் நாடாளுமன்றத்தில் நாடகமாடியுள்ளது ஒன்றிய அரசு. ஆனால், சமீபத்தைய பட்ஜெட்டில் (2026–27) தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு, இங்கிருந்து பெறப்படும் வரி வருவாயோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக அவமானகரமானது.

இந்தாண்டு ரயில்வே திட்டங்களுக்காக உத்தரப் பிரதேசத்திற்கு 20,012 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்திற்கு 15,188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதார என்ஜினாகத் திகழும் தமிழ்நாட்டிற்கு வெறும் 7,611 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படி நிதி ஒதுக்கீட்டில் மோசமான பாரபட்சத்தை காட்டிவிட்டு, அதிக நிதி ஒதுக்குகிறோம் என்று ஒன்றிய அரசு கூறுவது, மலினமான அரசியலின் தலைச்சிறந்த உதாரணம்.

தமிழ்நாட்டை வெறும் வாக்கு வங்கியாகவும் வரி வசூல் மையமாகவும் மட்டும் பார்ப்பதை ஒன்றிய அரசு அடியோடு நிறுத்த வேண்டும். ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டின் நியாயமான அனைத்து ரயில்வே கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். அதுவரை நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் எமது போராட்டம் தொடரும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவும், தந்தை பெரியாரும் முதன்முதலில் சந்தித்த இடமான திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன் உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர் – மாவட்ட ஊராட்சிக் குழு முன்னாள் உறுப்பினர்

ஒருங்கிணைந்த தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் மகளிர் அணி அமைப்பாளர் திருமதி இரா.தமிழ்ச்செல்வி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தருமபுரி, பிப். 6-

காலஞ்சென்ற மொழிப்போர்த் தியாகி எல்.பி.இராமர் அவர்களின் மூத்த மகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகப் பேச்சாளருமான திருமதி.இரா.தமிழ்ச்செல்வி மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது உடலுக்கு - கழகத்தினர் அஞ்சலி செலுத்தினார்கள்.

*தர்மபுரி மாவட்டம், இலக்கியம்பட்டியைச் சேர்ந்த (காலஞ்சென்ற) மொழிப்போர்த் தியாகி எல்.பி.இராமர் அவர்களின் மூத்த மகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகப் பேச்சாளரும், முன்னாள் ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினரும், முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினரும் (DC), இந்நாள் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - முன்னாள் எம்.பி.வழக்கறிஞர் இரா.தாமரைச்செல்வன், வழக்கறிஞர்.இரா.கருண